# ஞானோதயம்.

## பிரம்மஞான மாதாந்தப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 17 | 1926-௵ அக்டோபர்-௴ 11௳ | பகுதி 4. |


### அன்னை வசந்தைக்கு சரணம்.

(ஜன்ம தினம். அக்டோபர் ௴ 1௳)

க்ஷீரஸாகரசயன இராகம்.

பல். அன்னை வசந்தை அம்மையே நீர்
அக்டோபர் முதல்தேதி. (அ)

அநு. அயர்லாந்தினில் ஆர்வத்துடனுதித்தீர்
இந்தியாமிக ஏற்றமடைய. (அ)

சர. ஆரியதர்மத்தையும் நீர் பாரில் நிலைநாட்டி
அவனிதன் சேவைக்கே ஆவியுடல் பொருள்
ஜீவியகாலத்தையும் தியாகம் செய்தீர் (அ)

பாரினுள்ளவரிடம் பரிந்தன்பு மாரியாய்
சீர்பெரும் சாந்தமே வந்து
அன்னையுருவாகி அவதரித்ததுவோ
என்றுயாம் செய்ததவமோ (அ)

மானிலம்தனில் நீரும் மஹாகுருபோலாகவே
தோன்றி யுலவிடும் அன்னை
வாணினிதானோ வந்துதித்தாள் என்று
வையகத்தார் எண்ண (அ)

சொந்தமாகவே ஜகமெலாம் சீர் பெறவே
விந்தையாக உழைத்தீர் நீரும்
தாரகநாதன் தக்க சிஷ்யையாகி
தவமுனியருள் பெற்ற, (அ)

டி. பி. கோபாலாசாரியார்.

21088

# டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையாரின் 80-ம் ஜன்மதினம்.

பூ[illegible]து சிரோமணியாகிய நமது அன்னை வஸந்தாதேவியின் 80-ம் ஜன்மதினம் அக்டோபர் மாதம் முதல் தேதியாதலால் அத்தினத்தில் அந்த ஸ்திரீ ரத்னத்தின் ஜீவிய சரித்திரத்தையும், குணாதிசயங்களையும், செயல்களையும்பற்றி நாம் ஞாபக மூட்டிக் கொள்வோம்.

1847-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ம் தேதி விலியம் பேஜ் வுட் (William Page Wood) என்னும் ஒரு லண்டன் டாக்டருககு குமாரியாய் இந்த ஜன்மம் எடுத்தனர் நமது அம்மை. நமது ஹிந்து தேசத்தின்கண் பெரும்பான்மையோர் கர்மம், புனர் ஜன்மம் என்பனவற்றில் நம்பியிருப்பதால் நமது அன்னை தக்க தாய் தந்தையாரை அடைந்தார் என்று காண்கிரோம். அவ்விருவரும் மிகவும் புத்திக் கூர்மையும் ஆழ்ந்த படிப்பும் உள்ளவராயினும், தந்தை நம்பிக்கையின்மை என்ற குணம் வாய்ந்தவராதலால் நமது அன்னையின் இஜ்ஜன்மத்தின் முதற்பாதத்தில் நம் அன்னைக்கும் அக்குணம் உண்டாயது விளக்கமாகின்றது. 16-ம் ஆண்டு நிறைவதன்முன் பற்கலையும் பயின்று நற்குணமும் நிரம்பி தன் தாய்தந்தையருடன் மூன்று வருஷம் சுகமாக இருக்கையில், 19-ம் ஆண்டு மத்தியில் ப்ரேங்க் பெஸண்டு (Rev. Mr. Frank Besant) என்பவரை ஸந்தித்து அவர் தான் விரும்பிய க்லாபாம் (Clapham) என்ற ஜில்லாவுக்கு பாதிரியாய் இருந்ததால் அவரையும் விரும்பி 20-ம் ஆண்டு நிறைந்ததும் அவரை மணம் புரிந்தனர். இல்லற வாழ்க்கை இன்னதென்று அறியாத சிறு பெண்ணானதால் மிகவும் மனம் உடைந்து தவித்தனர். ஆயினும் இல்லற தர்மத்தினின்றும் சிறிதும் வழுவாது நடந்து வந்தனர். 1869-ம் ஜனவரியில் ஒரு பிள்ளையும் 1870-ம் ஆகஸ்டில் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. நமது தேசத்தில் நமது பெண்களுக்காகவும் குழந்தைகளுக்காகவும் உழைப்பதற்கு வேண்டிய அனுபவம் அடைவதற்காகத்தான் போலிருக்கிறது, அவ்வம்மை அச்சிறு பிராயத்தில் மணம் புரிந்து மகவு ஈன்று மனமுடைந்து தேகம் மெலிந்து பரிதபித்தது. 1871-ம் ஆண்டில் வஸந்த காலத்தில் இரண்டு குழந்தைகளுக்கும் கக்குவான் இருமல் (whooping Cough) வந்து கஷ்டப்பட்டன. இரவும் பகலும் பெண் குழந்



தையுடன் நித்திரையும் இன்றி கஷ்டப்பட்டு காத்து வருகையில், தினமும் கடவுளுக்கு தியானம் செய்தும் ஈசன் கருணை புரியவில்லையென்று எண்ணி மனம் உடைந்து தெய்வ நம்பிக்கையற்று நாஸ்திக மதம் கொள்ளலானர். கணவன் கிறிஸ்தவ பாதிரியாயிருக்க தான் நாஸ்திகக் கொள்கை கொண்டதாலும் நமது அன்னைக்கு பொய்நடித்தல் முடியாததாலும் இருவரும் பிரியநேர்ந்தது. அச்சமயத்தில் தன் தாய்க்கு கோர்ட்டு வியாஜ்யத்தால் பணம் எல்லாம் இழக்கநேரிட்டது. ஆகையால் பலவிதமும் கஷ்டப்பட்டு பணம் ஸம்பாதிக்க வேண்டியதாயிற்று. அக்காலத்தில் அக்கம் பக்கத்தில் உள்ள ஆண் பெண்கள் கூறிய கடும் மொழிகள் நமது அன்னையின் தாயார் மனதை புண்படுத்தினதுடன் சீக்கிரம் இறக்கவும் செய்தன. அக்காலத்தில் (Charles Bradlaugh) வின் சிநேகம்கிடைத்தது. உடனே 1874-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 2-ம் தேதி நாஸ்திக ஸபையில் சேர்ந்தனர். அது முதல் வெளியில் பொது நலத்திற்கு உழைக்க ஆரம்பித்தனர். நெருப்புப் பெட்டி செய்பவர்களுக்கும், வண்டியோட்டுபவர்களுக்கும், இன்னும் எல்லா வேலைக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் நமது அன்னை உழைத்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. வித்தியாசம் பாராட்டாமல் எல்லோருக்கும் பொது நன்மைக்காக உழைப்பதற்காக ஜன்மம் எடுத்தனர் என்பதைக் காட்டும் அறிகுறிகள் பல நிறைந்துள்ளன அவ்வாண்டுகள்.

1875-ம் வருஷத்தில் பிர்ம்ம வித்தியா சங்கம் ஏற்பட்டும், 1882-ம் வருஷத்தில் அத்துடன் ஸம்பந்தம் ஏற்பட தருணம் உண்டாயும் 1889-ம் வருஷம் வரையில் பிர்ம்ம வித்யா ஸம்பந்தம் ஏற்படவில்லை. அப்பொழுது ப்ளாவட்ஸ்கி (H. B. Blavatsky) அம்மாளுடைய குப்த சாஸ்திரம் (Secret Doctrine) என்கிற புத்தகத்தைப்பற்றி தன் அபிப்பிராயம் எழுத வேண்டி வந்தபோது அப்புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியதும் முன்பே தனக்குத் தெரிந்து மறந்துபோன உண்மைகள் மறுபடியும் ஞாபகத்துக்கு வருவதுபோல் எல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விசதமாயிற்று. உடனே ப்ளாவட்ஸ்கி அம்மாளை சந்தித்து பிரம்ம ஞான சபையில் சேர்ந்தனர். அப்பொழுது அதுவரை கூட இருந்தவர் எல்லோரும் பரிஹஸித்தனர். தனக்கு சரியென்று தோன்றிய பிறகு அறியாத பலர் ஏது கூறினும் கண்டுபிடித்தல்

நலம் என்னும் புத்தியை நமக்கு எடுத்துக்காட்ட அவ்விஷயம் ஒரு பாடம் ஆகிறது. 1889ம் ௵ மே௴ 10௳ ஸபையில் சேர்ந்து இரண்டு வருஷத்திற்குள் மிகவும் தீவ்ரமான உழைப்பாளியாயினர்.

1891ம் வருஷம் ப்ளாவட்ஸ்கி அம்மையார் வேறுவேலைக்காக இவ்வுடலைத் துறந்ததும், நமது அன்னை முன்னுக்கு வரவேண்டியதாயிற்று. 1893ம் வருஷம் நவம்பர் மாதம் 19ம் தேதி நமது தேசத்திற்கு அம்மை வரும் பாக்கியம் உண்டாயிற்று. அது முதல் இதுகாறும் நமது தேசத்திற்காக உழைத்திருப்பதைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ? ஸ்ரீ காந்தியடிகளும் “ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார் நம் இந்தியாவைத் தன் தாய் நாடாகக்கொண்டு அதற்கு இடைவிடாமல் உழைத்து வருவது நமது பரம பாக்கியமாகும்.” என்று எழுதியிருக்கிறார். இந்தியாவில் பல ஜன்மங்கள் இதற்கு முன் எடுத்திருப்பதாயும் அதை தன் நாடாகவும் கருதுகின்றமையாலும் அம்மாது இந்தியாவுக்காக உழைக்கின்றனர். 1924ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் அம்மையின் பொது நன்மை வேலையின் 50ம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட மஹோத்ஸவங்கள் பம்பாயிலும் சென்னையிலும் இன்னும் பல விடங்களிலும் நடந்தது. அம்மாதின் வேலையைப் பற்றிய நற்சாக்ஷிப் பத்திரங்களாம்.

1893-ம் வருஷம் முதல் இந்தியாவில் பற்பல இடங்களுக்குச்சென்று நம் தேயத்தினர்களில் ஆங்கிலப் படிப்பினால் மயக்குண்ட பலரையும், நம் புராணங்களிலும், இதிஹாஸங்களிலும், உபனிஷத்துக்களிலும், வேதங்களிலும் உள்ள அரிய விஷயங்களை எடுத்துரைத்து, நாஸ்திக மதத்தினின்றும் கிறிஸ்தவ பாதிரிகளின் வலைகளினின்றும் காப்பாற்றி, நம் சிறுவர்களையும் ஆங்கிலப்படிப்பில் தேர்ச்சிபெற்றதனால் மதம் பெற்று உன்மத்தாய் திரிந்த பலரையும் நம் ஸநாதன மார்க்கத்தில் புகச்செய்து நம் தேயத்தில் ஸன்மார்க்கத்தைப் புதுப்பித்த இம்மாதுக்கு எந்தக் கைம்மாறு செய்தால்தான் தகாது! ஆனால் கைம்மாறுக்காக உழைக்கவில்லையே அம்மாது. எல்லாம் ஈசன்செயல் என்றும், அவ்வீசன் பிரதிநிதியான ஸ்ரீ குமாருடைய மரபில்வந்த மனுவின் சிஷ்யரான அகத்திய முனிவரின் பிரதம சிஷ்யரான மருமகரிஷியின் சிஷ்யையானதால், தான் செய்வதெல்லாம் குமாருக்கு அர்ப்பணமாக எண்ணுவதாலும் கைம்மாறு ஏதாயினும் ஈசனுக்கே



போதலாலும், தனக்கு கர்மத்திற்கே அதிகாரமுள்ளதென்றும் அதன் பலன் தனதல்லவென்றும் ஸ்ரீமத் பகவத்கீதையின்படி நம்பியுள்ளவராகையாலும், கர்மயோக தீக்ஷைபெற்றவராகையாலும், அவர்க்கு நாம் செய்யும் கைம்மாறு என்னவென்றால், அவர்காட்டும் மார்க்கத்தில் நாமும் இறங்கி அவர்க்கும் அவர் குருநாதருக்கும் நம்மையும் நம் பொருள்களையும் ‘நமது’ என்னும் உடல் முதலிய எல்லாவற்றையும் அர்ப்பணம்செய்து அவர்மாதிரியே பொது நன்மைக்கு ஸதா ஸர்வகாலம் உழைப்பதே.

அகத்திய மகரிஷியின் உத்தரவின்கீழ் நம் நாட்டுக்கு வேண்டியவற்றில் பிரயாசை எடுத்துக்கொண்டு புது இந்தியா (New India) பத்திரிகையை நடத்துவது முதலிய பல அரும்பெரும் செயல்களைச் செய்துவருகிறார். சுதேசிய விஷயங்களில் அந்த ரிஷியின் மனப்படி அம்மாது நடப்பதால், பலர் தனக்கெதிராயினும் அதை கவனிக்காமல் தன் கருமமே—ஈசன் கருமமே—கண்ணாய் வெகு ஊக்கத்துடன் நம் தேசவேலையை நடத்திவருகிறார். ஒத்துழையாமை (Non-Co-operation) க்கெதிராய் அம்மாது நடந்ததுதான் சரி என்று பின் நடந்த ஸம்பவங்கள் நன்கு விளக்கின.

1907-ம் வருஷமுதல் பிர்ம்ம வித்தியாஸபைக்கு ப்ரெஸிடெண்டு (President) அல்லது அத்யக்ஷஸ்தானம் அளிக்கப்பெற்று, ப்ளாவெட்ஸ்கி, ஆல்காட், என்பவர்களால், தேவாபி மரு என்ற இரண்டு ரிஷிகளின் உத்திரவின் கீழும் ஸகாயத்தாலும் ஏற்படுத்தப்பட்ட ஸபையை மேன்மேலும் பரவச்செய்து, தற்காலம் 42 தேசங்களிலும் 1600 கிளைகளுடன், 45,000 அங்கத்தினர்களுடன் தழைத்தோங்கும்படிக்குச்செய்த சக்திவாய்ந்த அம்மை இன்னும் பல்லாண்டும் நமக்கு உதவிபுரியுமாறு நம்மோடு இருக்க வெள்ளியம்பலத்தின் ஆசீர்வாதம் உண்டாயிற்று என்பது நாம் எல்லோரும் ஸந்தோஷிக்கவேண்டிய விஷயமே.

கல்வி விஷயத்தில் நம் தேசத்திற்காக நமது அன்னை எடுத்துக்கொண்டிருக்கிற சிரமம் இவ்வளவு அவ்வளவு என்பதல்ல. காசியில் ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் (Central Hindu College) என்பதை ஏற்படுத்தி, அதன் மூலமாய் நம் சிறுவர்கள் சிறுமிகள் அநேகருக்கு நம்மதத்தை வெகு விமர்சையாய் ஊட்டி, மாணவர்களெல்லோரையும் பிர்ம்மசர்யத்தில் நிலைநிறுத்திய சிமாட்

டியல்லவோ நமது அம்மை? அக்கலாசாலையின் பெருமையும், அதன் மேன்மையும் எல்லோருக்கும் தெரிந்ததே. ஹிந்து வித்யா பீடத்திற்காக (HinduUniversity) அதை எடுத்துக்கொண்டதே அதன் ஏற்றத்தைக் காண்பிக்கிறது. பிர்ம்மவித்தியா கல்வி ஸபை (Theosophical Educational Trust) மூலமாய் பற்பல விடங்களிலும் சிறுவர்க்காகவும் சிறுமிகளுக்காகவும் கல்விச் சாலைகள் ஏற்பட்டு மிக்க நல்ல வேலை செய்கின்றன.

மேலும் நம் தேசத்தில் உள்ள மிகவும் கொடிய வழக்கங்கள் பலவற்றையும் ஒழிக்க ஊன்றி வேலைசெய்கிறார். கட்குடித்தல், சூதாடல், மாம்சம் தின்னல், அம்மை குத்தற்காக மிருகங்களை ஹிம்ஸித்தல், பஞ்சமர்கள் என்று நமது ஸகோதரர்கள் சிலரை அவமதித்து பழித்தல், பால்ய விவாஹம், விதவை விவாஹ மறுத்தல் முதலிய பாபங்களைப்போக்க மிகவும் பிரயாசைப்பட்டுள்ளார்.

நமது அன்னையின் தேசவலிவும் ஊக்கமும் அதிசயிக்கத்தக்கதே. இவ்விஷயத்தைப்பற்றி பின்வருமாறு ஸ்ரீமான் பிபின் சந்திரபாலர் (Bepin Chandra Pal.) எழுதுகிறார்:-"அவர் பேசும்பொழுது அவர் முகத்தில் ஓர் அதிசயமான தேஜஸ் உண்டாகக் கண்டிருக்கிறேன். அது அவருடைய யோகசக்தியின் பயன் என்பதில் தடையில்லை. அது அவர் மனதுக்கும் அவர் உடலுக்கும் உள்ள அன்யோன்யத்தையும் அவ்விரண்டினுடைய முதல்தரமான சுத்தத்தையும் காண்பிக்கின்றது. அவரைப் பார்க்கும்போதெல்லாம் இமர்ஸன் (Emerson) சொல்லியபடி 'ஆன்மா முழுதும் உடம்பாயும் உடல்முழுதும் ஆன்மாவாயும்' உள்ளவர் என்று உறுதியாய்ச் சொல்லலாம் என்று நினைத்திருக்கிறேன். அவ்வளவு நன்றாய் உடலும் ஆன்மாவும் ஒருமைப்பட்டு இருப்பது அவர் வாழ்க்கையின் சுத்தத்திற்கு ஓர் நல்ல ருசு. பிரம்மசரியத்தின் விதிகளை குறைவற அனுஷ்டித்திருந்தாலொழிய அவ்வித தேகஸ்திதி பெஸண்ட் அம்மைக்கு வருவது அஸாத்யம். அவ்வித சுத்த காம்யமற்ற வாழ்க்கையின் பயனால் அம்மாதுக்கு யோகஸித்திகளும் சக்திகளும் உண்டாயிருக்கின்றன.'' காலையில் எல்லோரும் எழுந்திருப்பதற்கு முன்னரே எழுந்திருந்து, இரவு 10-மணிக்குமேல் வரையிலும் இடைவிடாமல் எப்பொழுதும் பல வேலைகளைச் செய்துவருகிற இவ்வம்மணியுடன் இருப்பவர்கள்



சொல்வதைப் பார்த்தால் ஸாதாரண மானிடப்பிறப் பல்லவென்று நினைக்கவேண்டியிருக்கிறது. அத்துடன் அவ்வம்மையின் பக்கத்திலிருப்பவர்களுக்கு எப்பொழுதும் ஒரு சக்தியும் அன்பும் உண்டாகும்வண்ணம் அவரிடத்திலிருந்து தேஜஸான சக்தி வெளிப்படுகின்றது. சென்ற மார்ச்சு மாதம் 29ம் தேதி ராஜமஹேந்திரபுரத்தில் 9 மணி நேரம் அம்மாதுடன் கூட இருக்கும்பாக்கியம் பெற்றேன். அப்பொழுது நான் அடைந்த பெரும் பேற்றை வெளியிட முடியவில்லை. அப்பொழுது அம்மாது உண்ணும்போது பக்கத்தில் இருந்தேன். ஆகாரம் என்பது வியாஜம்தான். ஆயினும் தொழில் செய்வதில் ஈசனிடத்தினின்றும் குருநாதனிடத்திலிருந்தும் அவருக்கு சக்தி உண்டாகின்றது என்பதில் ஐயமில்லை.

நமது அன்னையின் வாசா ஸாமர்த்யத்தைப்பற்றி புகழாதாரும் உளரோ? அது வரப்ரஸாதம் என்பர் சிலர். பயிற்சியாலானது என்பர் வேறுசிலர். அவர் இயற்கை என்பர் இன்னும் சிலர். நமது அன்னையே முதல் முதல் தன் வாய் திறந்து பேசியபோது தானே ஆச்சரியப்பட்டதாகக்கூறியுள்ளார். காம்பீர்யமும் மதுரமும் சொற்சுவையும்பொருட் சுவையும் வார்த்தைகளின் ஒழுங்கும் நிறைந்து, பிபின் சந்திரபாலர் சொல்லியபடி, "மனதைக் கவரத்தக்க தேகத்தினின்றும் வெளிவரும் மொழிகளுடன் கருத்துக்கிசைந்த ஜாடைகளுடன் பேசுந்திறம் அவர் தன்னை தன் குருநாதற்கே அற்பணம் செய்தமையால் அவருக்கு உண்டாயிருக்கும்'' என்றே தோன்றுகிறது.

பெஸந்தம்மையின் ஞானத்திற்கும் வரம்புண்டோ? அவருக்கு அறியா விஷயமுமுண்டோ? உண்டானல் கற்காமலிருப்பரோ? பல மதங்களிலுமுள்ள புத்தகங்களில் பெரும்பான்மையை அறிவதுடன் முக்கியமாய் தன் உரிய நாடாகிய இந்நாட்டின் ஹிந்துமத புத்தகங்களில் முதன்மையான உபநிஷத்துக்கள் பிரம்மஸூத்ரம் ஸ்ரீ பகவத்கீதை முதலியவற்றை முற்றும் உணர்ந்து ஓதி எடுத்துரைக்கவல்ல சக்திவாய்ந்துளர். கோமெஸானிக் (Co-masonic) சங்கத்திற்கு முதற் பிரதிநிதியாய் அதில் மிகவும் மேன்மைபெற்றவர். ஸ்கௌட் (Scout) சங்கத்தில் இந்தியாவிற்கு பிரதம உத்தியோகஸ்தர். இன்னும் பல துறைகளிலும் பெருமை வாய்ந்தவர்.

நமது அம்மையின் குணாதிசயங்களைப்பற்றி எடுத்துக்கூற இக்கடையேனுக்குங் கூடுமோ? தனக்கு விரோதியாயிருப்பி

னும் அவருடன் கருணையுடனும் ப்ரீதியுடனும் நடக்கும் ஸ்வபாவம் அம்மைக்குத் தனித்ததான இயல்பு. பிறர் குற்றத்தையெல்லாம் மாற்றி நற்குணங்களாக்கும் தன்மையினராகையால் அயலார் குற்றத்தை எப்பொழுதும் கவனிப்பதில்லை. நமது அம்மை பக்தியுடன் கூடிய கர்மயோகம் ஸித்திபெற்றவராகையால் பிரஹ்லாதர் எங்கும் நாராயணன் மயமாய் தான் காண்பதால் தனக்கு சத்ரு இல்லை என்றதுபோல் எங்கும் கடவுள் மயமாய் தனது யோக திருஷ்டியால் கண்டு ஒழுகும் மாதுக்கு விரோதியும்உண்டோ? எவரிடத்தும் ஸகஜமாய் ப்ரீதியுடன் அவரவர்க்கு வேண்டியவற்றைச சொல்லியும் செய்தும் உதவிபுரியும் ஸ்வபாவமுடைத்தாய் தனக்கு பகவத்கைங்கர்ய ஸ்வரூபந் தவிர வேறில்லை என்று அனுஷ்டிக்கும் பக்தசிகாமணியை நம் சிரமேற்கொண்டு கொண்டாடல்போதுமோ?

தனது யோகசக்தியாலும் யோக ஸித்தியாலும் பிறரையும் யோகமார்க்கத்தில் பயிற்றுவதுடன் தனது சக்தியால் இத்தேசத்தையும் பிறதேசங்களையும் மேன்மைப்படுத்தியும், எங்கும் ஈசன் அருளும் சக்தியும் உண்டாகும்படி செய்துவருவதும் அருமையான ரகசிய விஷயங்களையும் உண்மைகளையும் வெளிப்படுத்துவதும் அகடிதகடன சாமர்த்தியத்துடன் எல்லோரையும் வென்று எதையும் ஸாதிப்பதும் செய்துவருவதுடன் தானும் பரமஹம்ஸ நிலையையடைந்தார் என்பது நன்கு புலப்படுகிறது. அவ்விதம் பெரும் நிலையையடைந்ததற்கு அறிகுறியாய் அவர்க்கு இப்போது 79-ம் ஆண்டு முடிந்ததோ என்று தோன்றுகிறது. ஈஜிப்டு தேசத்தின் குப்த எண் சாஸ்திர (Kalaba of numbers) த்தின்படி $79 = 7 + 9 = 16 = 1 + 6 = 7$. ஏழு என்ற எண் ஒரு எல்லை காட்டும் என்பது தத்வதர்சிகளுக்குத் தெரிந்ததே. ஆகையால் நமது அம்மை மேல் நிலையான பரமஹம்ஸ தசையடைந்தார் என்பதை முன் வருஷமே ஸ்ரீ மஹாசோஹன் எழுதிய கடிதத்தினின்றும் புலப்படுகின்றது.

இவ்விதம் மகாத்மாவாகிய பெஸண்டு அம்மையார் ஸ்ரீஜகத்குருவின் வருகைக்காக உழைத்து அவருடன் உழைக்கும் பெரும் பாக்கியம்பெற்று அவர்க்காக தயார் செய்யப்பட்ட உடல் உடைய ஸ்ரீமான்கிருஷ்ண மூர்த்தியுடன் இப்புவியைவலம்வந்து உலகத்தை உஜ்ஜீவிக்கும் தொழிலில் தற்காலம் ஊன்றியிருக்கிறார். அக்காரியம் ஈசன் அருளால் நிறைவேறுவதுடன் அம்மாது நம்முடன் பல்லாண்டுகள் தேகவலிவுடன் ஐயன் ஆணையை நடத்தி வருவாராக, என்று கடவுளை வேண்டி அம்மையின் 80ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுவோம்.

ஓம். சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கும்பகோணம் 1—10—1926. S. K. பார்த்தஸாரதி. டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்.

# திவ்யஞானஸாரம்.

65-ம் பக்கத் தொடர்ச்சி.

ப்ராயேண தேவமுநய: ஸ்வவிமுக்திகாமா:
மௌநம் சரந்தி விஜநே ந பரார்த்தநிஷ்டா:|
நைதாந் விஹாய க்ருபணாந் விமுமுக்ஷ ஏக:
நாந்யம் த்வதஸ்ய ஶரணம் ப்ரமதோऽநுபஶ்யே ||

தேவரே ! முனீந்த்ரர்கள், தம் தம் முக்தியைக் கோரினவர்களாக, மனிதர்களில்லாத இடங்களில் தபஸ்செய்வார்கள். இதரர்களின் கதியைப்பற்றி விசாரிக்கமாட்டார்கள். அக்ஞானிகளாக இருக்கிற இவர்களை எல்லாம் விட்டு, நான் ஒருவனே மோக்ஷத்தை விரும்பக்கூடாமையானவன். இவர்களெல்லாருக்கும் தாங்களே தான் சரணம் அடையத்தக்கவரென்று தாத்பர்யம்.

மேலும் ஸ்ரீ கபிலாசாரியர், தாயாராகிய தேவஹூதிக்குப் போதித்த பக்தி தத்வத்தில் இப்படிப் போதித்திருக்கிறார்.

“ ஸாலோக்ய ஸார்ஷ்டிஸாமீப்ய
ஸாரூப்யைகத்வமப்யுத |
தீயமாநம் ந க்ருஹ்ணந்தி
விநா மத்ஸேவநம் ஜநா: ||”

2/0808

அதாவது, ஸாலோக்யம் (ஒரேலோகம்), ஸமானமான ஐஸ்வர்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஏகத்வம் (ஸாயுஜ்யம்) இத்தனை விதங்களான முக்தியைக் கொடுத்தாலும் (என் பக்தர்கள்) வாங்கிக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் கோருவது என் ஸேவை ஒன்றேதான் என்று தாத்பர்யம்.

அப்படி என்றால், “ஈசுவரபதாம் புருஹஸ்யஸேவா” ஸமஸ்த ஜகத்தும், ஸமஸ்த பூதங்களும் ஈசுவரனுடைய பாதமாகையால், அவர்கள் கோருவது ஸமஸ்தபூத ஸேவைதான்.

ஆகையினால் அந்தக்கடைசி கோரிக்கையாகிய கைவல்யபதவியைக்கூடவிட்டு எல்லாவற்றிலும் ஈசுவரனையே பார்த்துக்கொண்டு எல்லா இடங்களையும் வைகுண்டமாகவும், கைலாஸமாகவும் பார்த்துக்கொண்டு,

“ [illegible] ”

என்று சொன்னதுபோல, எல்லாக்கார்யங்களையும் ஈசுவர ஸம்பந்தமான கார்யங்களாகப் பாவித்துச்செய்கிறவர்கள் தான் ஜீவன் முக்தர்கள்.

ஜீவாத்மாவிலடங்கியிருக்கிற ஆத்ம சக்திகள் எல்லாம், பீஜ ரூபங்களாக இருந்து, விகாஸம் அடையாததால் இந்தப் பூர்ண ஞானம் முதலிலேயே இருக்கமாட்டாது. ஸரியானமார்க்கத்தில் வேலை செய்யச்செய்ய, ஆத்மா பூரணமான மலர்ச்சியை அடையும்; அவித்யையின் ஆவரணம் விட்டுப்போகும். எல்லாவற்றிலும் ஏகத்வஞானம் (ஒன்றேதான் என்கிற பாவம்) ஸ்திரப்படும்.

இந்தப்பழக்கம் க்ருஹஸ்தன் செய்யவேண்டியதல்லவா? க்ரஹஸ்த தர்மங்களை ஜாக்கிரதையோடு நடத்திக்கொண்டு தர்மத்திற்கு விருத்தமில்லாத மார்க்கமாகப் பொருளை ஸம்பாதித்துக்கொண்டு, தர்மத்திற்கு விருத்தமின்றி, காமங்களைக் கால நியமங்களுக்குட்பட்டு, அநுபவிப்பதின் மூலமாக, க்ரமக்ரமமாக இந்த்ரிய ஜயத்தைப்படைத்து தினம் தவறாமல் ஈசுவரத்யானம், சாஸ்த்ர ஆராய்ச்சி, இவை முதலானவைகளால் சித்தசாஞ்சல்யத்தை ஜயித்து, மனச்சக்தியை வ்ருத்திசெய்துகொண்டு, ஸ்வாதீனமாயுள்ள தேஹத்தையும் இந்திரியங்களையும் மனஸ்ஸையும் இன்னம் தனக்குள்ள போகத்திற்கு ஸாதனமான ஸம்பத்துக்களையும், ஸர்வபூதங்களுக்கும் ஹிதத்தை உண்டாக்கக்கூடிய வ்யாபாரத்தில் விநியோகம் செய்வதால், அஹம்காரம், மமகாரம், அஸூயை, திரஸ்காரங்களையும், தான் வேறென்ற பாவங்களையும், நசிக்கச் செய்து, எல்லாவற்றிலும் ஆத்மத்ருஷ்டியை அப்யாஸம்செய்வான். இந்தமார்க்கம் ஜனகர் காண்பித்த த்ருதீய (மூன்றாவது) மார்க்கம். அப்படிப்பட்டவர்கள் அநுஸரிக்கிறமார்க்கமானது, ஆதியில் அவர்கள் பரிபூரணர்கள் ஆவதற்கு சாதனம். பரிபூர்ணர்கள் ஆன போதிலும், அந்த மார்க்கத்தையே அநுஷ்டித்துக்கொண்டு “லோக ஸங்க்ரஹத்தையே” (க்ஷேமத்தையே) இச்சித்து, லோகத்தின் சுபத்துக்காகவே ப்ரவர்த்திப்பார்கள்.

இப்படிப்பட்ட க்ருஹஸ்தர்கள், பாரமார்த்திக க்ருஹஸ்தர்கள். என்றால், க்ருஹஸ்த தர்மத்தை அநுஸரித்து வந்தபோதிலும் அந்தரங்கத்தில், பாரமார்த்திக தர்மங்களையே குறிப்பாக வைத்துக்கொண்டு நடப்பார்கள்.



இதுவரையில் இவர்களின் அந்தரங்க வ்ருத்தியையும், இவர்கள் அந்தரங்க சுத்திக்காகச்செய்யும் ஸாதனங்களையும் (உபாயங்களையும்) காட்டினோம். இவர்கள் வெளிப்ரவர்த்தனையில், லௌகீக வ்யவஹாரங்களில் எப்படிப்ரவர்த்திப்பார்களோ அது தெரிந்து கொள்ளத்தக்கதாக இருக்கிறது.

ஆதியில், என்றால் அஞ்ஞானதசையில், ஜீவன் இந்த்ரியங்களுக்குக் கேவலம் உட்பட்டவனாகி, விஷய லோலனாகி நடந்து கொண்டுவருவான். கொஞ்சம் அளவு தர்மாதர்மங்கள், யுக்தாயுக்தங்கள், காலாகாலங்கள், இவைகளை கவனிக்காமல், விஷய ஸுகங்களை எப்படியாகிலும் அடையவேண்டியதொன்றே உத்தேசமாக நடப்பான். நாளடைவில், இரண்டாவதுபடி ஏறி பொருள் ஆசை முதன்மையாகத் தர்மத்தைப் பாராட்டித் தர்மத்தையும் ந்யாயத்தையும் விசாரித்து அவைகளுக்கு விரோதமின்றி நடக்கப்ரயத்னப்படுவான். இந்த ஸ்திதியிலிருக்கும்போது இதரர்களால் தான் அடையும் லாபத்திற்குப் பதில் பிறர்களுக்கு அதற்கு ஸமானமான லாபமும் ஸுகமும் உண்டாக்கவேணுமென்கிற எண்ணம் முக்கியமாக ஏற்படும். அப்பொழுது ஸாத்தியமானமட்டில் அந்யோந்ய ருணானுபந்தங்களைக் கண்டறிந்து தன்னாலானமட்டில் கடனிலிருந்து விடுபட்டவனாகத் தகுந்த ப்ரயத்தனத்திலிருப்பான். தனக்கும் தன்னைச்சேர்ந்தவர்களுக்கும் லாபகரமும், ஸுககரமுமான கார்யங்கள் மாத்திரமல்லாமல், ஸ்வதர்மத்தை விசாரித்து, அதை ஸரியாகநடத்த ப்ரயத்னப்படுவான். தனக்கு ஸ்வதர்மமெனத் தெரியவந்தகார்யமானது, தனக்கு லாபமுண்டாகக்கூடியதா அல்லது நஷ்டமுண்டுபண்ணுமாவென்று யோசிப்பதைவிட்டு, தனக்கு ஸ்வதர்மமானதால் லாபநஷ்டத்தையும், ஜயாபஜயங்களையும், ஸுகதுக்கங்களையும், கணக்கிடாமல் கார்யங்களைச்செய்வான். அதற்குமேல், மூன்றாவதுபடியில், ஸ்வதர்மரூபமானகார்யங்களைவிட, உயர்ந்ததான லோகத்திற்கு உபகாரமான கார்யங்களில் ப்ரவர்த்திப்பான். தான், அஞ்ஞானதசையில், பிறர்களின் ஸுகதுக்கங்களை லேசமும் எண்ணாமல், இதரர்களால் அடைந்த ஸுகங்களையும், லாபங்களையும் தெரிந்தும் தெரியாம

னும் அநேக ஜன்மங்களில் இதரர்களுக்குத் தான் பட்டிருக்கும் அநேக விதமான ருணங்களை ஊகித்து ஞாபகத்திற்குக்கொண்டு வந்து, இப்பொழுது தன் சக்தி, ஸாமர்த்யங்களை இதரர்களுடைய க்ஷேமத்திற்காக உபயோகிப்பதுதான் முக்கியமான கருத்து என்று எண்ணுவான். இந்தக்கார்யம் செய்வது தனக்கு விதியா, இல்லையா என்ற விசாரமிராது. பிறர்களுக்கு ஹிதமான கார்யங்களைத்தனக்கு அவகாசமிருக்கிறவரையில் தன் சக்திக்கு உட்பட்டவரையில், எல்லாவற்றையும், தன்னுடைய தர்மங்களாகவே எண்ணி, லோகஹிதத்திற்காக, ஸதா கார்யத்தைச்செய்யும் எண்ணத்துடனே இருப்பான். இப்படிப்பட்ட நிலையானது ஜீவன் நிவ்ருத்திமார்க்கத்தில் ப்ரவேசித்தகாலமாகும். இதுவரையில் ப்ரவ்ருத்திமார்க்கத்திலிருந்து, ஸ்வப்ரயோஜனத்தையே கருதி ப்ரக்ருதியால் கட்டுப்பட்டவனாக இருந்தவன், சிலகாலம்வரை நீசஸ்வபாவத்தை அடக்கிக்கொள்ள ப்ரயத்னம் செய்துக்கொண்டு, மத்யஸ்திதியிலிருந்து கையாலானமட்டும், தர்மத்தைப் பரிபாலனம் செய்ய, யத்னப்படுவான். அது ப்ரவ்ருத்திமார்க்கத்திலிருந்து நிவ்ருத்திமார்க்கத்திற்கு நேராக யத்னம்செய்யும்காலம். பிறகு, மூன்றாவது படியில் த்யாகம் செய்வதையே ஸ்வபாவமாகக்கொண்டு பிறர்கள் தனக்கு நஷ்டத்தை உண்டாக்கினாலும் அதற்குப்பதில் அவர்களுக்கு நன்மையே செய்கிறவனாவான். "அபகாரிக்கும் உபகாரத்தை நிந்திக்காமல் செய்கிறவன் தான் தெரிந்தவன், "ஸுமதி'' என்றுசொன்னாற்போல், தான் எல்லோருக்கும் நன்மையையேதான் செய்ய உழைத்துக்கொண்டிருப்பான். அப்படிப்பட்டவன் ஹ்ருதயத்தில், சத்ருக்கள், மித்ரர்கள், விலக்கப்படவேண்டியவர்களென்ற பேதமிராது. சத்ருக்கள் என்றும், மித்ரர்கள் என்றும் லோகத்தார் பார்வையில் தோன்றினாலும், அவர்களிடத்தில்கூட ஸமபுத்தியைவைத்து எல்லாருக்குமே உபகாரமேசெய்வான். அப்படி த்யாகம் செய்வதில் ஆனந்தத்தையேதான் அனுபவிப்பான். த்யாகம் செய்வதற்கும், லோகத்திற்கு உழைக்கவும், அவகாசங்களைத் தேடிக்கொண்டு, அகப்பட்டபொழுதெல்லாம், ஆனந்தத்துடன் லோகஸேவை செய்துகொண்டு ஆனந்தபரிதனாவான் (நிறைந்தவனாவான்).

கடைசிப்படியில் எல்லா கர்மங்களையும் ஈசுவரகைங்கர்யமாகப் பாவித்துக்கொண்டு லோகத்தில் ஈசுவரனுடைய கிங்கரனைப்



(வேலைக்காரனை)-போல் நடப்பான். "நான்'' என்ற பாவத்தையே மறந்து எல்லா பூதங்களையும், ஈசுவராலயங்களாக எண்ணி, ஸகல பூதஸேவையையும் ஈசுவரார்ச்சனையாக எண்ணுவான். எந்த ரூபத்தை அலக்ஷ்யம்செய்தாலும், ஈசுவரனை அவமானித்தமாதிரி என்றெண்ணி எப்பொழுதும் ஜாக்ரதையாக இருந்துகொண்டு, பூதஸேவையில், தன் தேஹத்தையே மறந்துவிடுவான். ஈசுவரன் ப்ரபஞ்சபாரத்தைவஹித்து, அதை நிலைக்கச்செய்யும் கார்யத்தில் இறங்கியிருக்கிறதுபோல், ஈசுவரதாதாத்ம்யத்தை (ஈசுவரனைப் போலதான் ஆனதாக எண்ணி) அடைந்து, அப்யாஸம் செய்துகொண்டு, எப்படி நிர்வாஹகனான குமாரன், தகப்பன் சுமக்கும் குடும்பபாரத்தைத் தான் வஹிப்பானோ அப்படியே, ஈசுவரனுடைய வேலைக்காரனாகத்தன் சக்திக்கு ஏற்றமட்டும் ப்ரபஞ்சபாரத்தை வஹிக்கயத்னம்செய்வான். அதாவது தன் சக்திக்கும், அவகாசத்திற்கும் தகுந்தபடி பூதஸேவை ஈசுவரார்ப்பணமாகச் செய்து, இந்த ஸேவைமூலமாகவே, ஈசுவரபூஜையைச்செய்வான்.

இப்படிப்பட்ட மஹநீயர்கள் லோகத்தில் லோகத்தின் க்ஷேமத்தின் பொருட்டே ஜீவிப்பார்களே தவிர ஆத்மார்த்தமாக (தங்களுக்காக) அல்ல.

ஶிவாயலொகஸ்யஹிதாயஸந்ததெ
யதந்தெஶ்ரேயாகவராயணாஜநா:

அப்படிப்பட்டவர்கள், லோகத்தில் செய்யும் கார்யங்களெல்லாம் லோகமங்களத்தையும், லோகத்தின் முன்னேற்றத்தையும் உத்தேசித்துச் செய்யப்படுமே ஒழிய ஸ்வந்தகாரணங்களை முன்னிட்டல்ல. எந்தக்கார்யத்தில் ப்ரவேசித்தாலும், அதன்பலன் இஹலோகத்திலாகிலும், பரலோகத்திலாகிலும், ஜன்மாந்தரத்திலாகிலும், தங்களுக்குச் சேரவேண்டுமென்றாகிலும், அல்லது, இப்படிப்பட்ட ஸத்கார்யம் நானல்லவா செய்கிறேனென்ற அபிமானம் கொண்டாயினுஞ் செய்யாமல், லோகத்திலுள்ள ஸகல ஜனங்களும், ஸகல பூதங்களும் ஸுகப்படவேண்டும், அபிவ்ருத்தியடையவேண்டும், உத்தமமான புருஷார்த்தத்தை அடையவேண்டும், பகவானுடைய மஹாஸங்கல்பம் நிறைவேறவேண்டும் என்கிற உத்தேசத்துடன் செய்யப்படும். இப்படிச்செய்யும் கார்யம்,

ஸ்ரீ ஜநகர் முதலானவர்களைப்போல் செய்த ராஜ்யபரிபாலனமாக இருந்தாலும், உபதேசமாக இருந்தாலும், ஸாமாந்யமாக லோகத்தார் த்ருஷ்டியில், நீசகார்யங்களென்று எண்ணப்படும் கார்யங்களாக இருந்தாலும், அக்கார்யங்களைச் செய்வதில் பலாபேக்ஷையும், அபிமானமுமின்றி, ஜனங்களெல்லோரும் ஸுகமாக ஜீவிப்பார்களாக, என்றும் லோகமெல்லாம் ஸுகமாக அபிவ்ருத்தியடையக் கடவதாக வென்றும் செய்தால், அந்தக்கர்மங்களே, ஈசுவர பூஜைகளாகி உத்தமமான ஞானத்திற்கு ஸாதனங்களாகும். இப்படிச் செய்யப்படும் கர்மங்களுக்கும் உத்தமமான ஞானத்திற்கும் வித்யாஸம் கிடையாது. ஸ்ரீ க்ருஷ்ணர் பகவத்கீதா சாஸ்த்திரத்தில் போதித்தது இம்மாதிரியான கர்மாதான். இப்படிப்பட்ட கார்யத்தைத்தான் "அகர்மா" வென்று சொல்லப்பட்டது.

𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌯𑌃𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌿𑌚𑌕𑌰𑍍𑌮𑌯𑌃 ।
𑌸𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁𑌸𑌯𑍁𑌕𑍍𑌤𑌃𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ॥

கர்மத்தில் அகர்மத்தை எவன் பார்ப்பானோ, அப்படியே அகர்மாவில் கர்மாவை எவன் பார்க்கக்கூடியவனோ, அவன்தான் மனிதர்களுள் புத்திமான், அவன்தான் யோகி, அவனேதான் க்ருதக்ருத்யன், என்று தாத்பர்யம்.

அதாவது, எவனாவது தான் செய்யும் கார்யங்களைப் பலனை அபேக்ஷிக்காமலும், அபிமானமில்லாமலும் லோக ஹிதத்திற்குமட்டும் செய்துகொண்டு, அப்படிப்பட்ட கர்மத்தை, அகர்மாவாக (கர்மா இல்லாததாக) தெரிந்துகொள்வானோ, அப்படியே மூடத்தனத்தினாலாவது, அஹங்காரத்தினாலாவது, செய்யவேண்டிய கார்யத்தைச் செய்யாமல் உபேக்ஷித்து ஒன்றும் செய்யாமலிருப்பதில், செய்யவேண்டியதைச் செய்யாதிருந்த தோஷமிருப்பதால், அப்படிப்பட்ட அகர்மா, கர்மத்தோடு ஸமானமென்று அறிவானோ, அவன் நிஜமான யோகி, அவன்தான் க்ருதக்ருத்யன்.

இந்த விஷயத்தில் இன்னொரு ரஹஸ்யமுண்டு. க்ருஹஸ்த தர்மத்திலிருக்கிறவர்களுக்குச் சுற்றுப்பக்கங்களில் மனதை, சிதறச்செய்யும்படியான விஷயங்களிருப்பதாலும், ஜீவயாத்திரையில் அனேக கஷ்டங்கள் ஸம்பவிப்பதாலும், மேலே ஸங்கிரஹித்த உத்தம தர்மங்களை அநுஷ்டானம் செய்வதில் ப்ரமாதங்கள் உண்டாக



அவகாசமுண்டு. ஆகையால் ஸந்யாஸம் செய்துகொண்டாலொழிய மோக்ஷமார்க்கத்தைப் பற்றுவது ஸாத்யமில்லை என்று நினைப்பார்கள். ப்ரமாதத்திற்குக் காரணங்கள் இருப்பதைக்கொண்டு அவைகளை விட்டு ஓடிப்போவது, ஒரு பயங்காளியின் கார்யமேதவிர தீரனுடைய நடவடிக்கை அல்ல. ஆதியில், இந்த்ரிய நிக்ரஹமும் மனோ நிக்ரஹமும் கொஞ்சம்கூட இல்லாமலிருந்தவனுக்கு அவைகளை ஸாதிப்பதற்கு, பாஹ்ய (வெளி) ஸந்யாஸம் வேண்டுமேதவிர, அதுதான் உத்தமத்தில் உத்தமமென்றாவது, எல்லாருக்குமே ஸந்யாஸம் அவசியமென்றாவது எண்ணக்கூடாது. பூர்வ ஜன்மங்களில் அந்த ஸந்யாஸமார்க்கத்தை அவலம்பித்துக் கொஞ்சம் நிலையை அடைந்த தீரர்களுக்கு, சத்ருமத்யத்திலிருந்து, போர் செய்து, சத்ருக்களை ஜயித்தமாதிரி, ப்ரமாதங்களை உண்டுபண்ணும் விஷயங்களின் மத்தியிலிருந்துகொண்டே கிரமக்ரமமாக அப்யாஸித்தால், விஷயங்களில் இழுக்கப்படுவதை அதிக்ரமித்துத்தன்யர்களாவதுதான் உத்தமமார்க்கம். இதுதான் தீரனுடைய மார்க்கம். இந்த மார்க்கத்தை அவலம்பிக்க கையினாலாகாதென்று, பயப்படுகிறவர்களுக்கு ஸந்யாஸமும், ஏகாந்தமும் தகுந்தமார்க்கம். அவர்களும் வரும் ஜன்மங்களில் தீரர்கள் ஆகி, விஷயங்கள் மத்தியிலிருந்தாலும், அவைகளின் ஆகர்ஷணைக்கு வசப்படாமல் தாமரை இலையில் தங்கும் ஜலத்தைப்போல் ஒட்டாமல் இருக்கக்கூடிய ஸ்திதிக்குவரக்கூடும். பூர்வஜன்மத்தில் அப்படிப்பட்ட ஸ்தைர்யத்தை (அசையாத தன்மை) ஸம்பாதித்த தீரர்கள், சிலர் இந்த ஜன்மத்தில் கிரஹஸ்தர்களாக இருந்தும், செய்யக்கூடிய கார்யங்களை, லோபமின்றி செய்துகொண்டு, பற்று இல்லாமல், லோககைங்கரியம் செய்துகொண்டு, லோகமெல்லாம் தங்கள் குடும்பமாக, ஈசுவர ஸங்கல்பத்தை முடிப்பதே முக்யமான கருத்தாக வேலைசெய்துவருகிறார்கள். இது பெரிய லக்ஷ்யம் (குறி), எட்டிப் பிடிக்கவேண்டிய தர்மம், பெரிய முயற்சி. முக்யமாக, இந்தக் காலத்தில் எல்லா இடங்களிலும் தன்பொருளை த்யாகம்செய்து பற்றில்லாதவர்களாகி, லோகஹிதத்திற்காக உழைக்கிறவர்கள் அநேகர்கள் வேண்டும். அப்படிப்பட்ட தீரர்கள் லோக ஸேவைக்காக, மஹநீயர்கள் க்ருபையினால், அநேகம்பேர்கள் வெளிப்படுவார்களாக.

(இன்னும் வரும்.)

# *திரிபுரதஹனம்.

## (உட்கருத்து)

திரிபுரதஹனம், அல்லது திரிபுராசுரஸம்ஹாரம் என்னும் புராணக்கதை ஒன்றுண்டு. புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் கதைகள், சில நீதிபோதங்களாகவும், இன்னும் சில மறைவாயுள்ள ஆத்மதத்துவங்களைப் போதிப்பவைகளாகவும் இருக்கின்றன. இப்பொழுது சொல்லப்புகும் விஷயம் தத்துவபோதமாயுள்ள கதை. கேவலம் ஸ்தூலமாயுள்ள சப்தார்த்தத்தைக் கைக்கொள்ளின், இவ்வித புராணக்கதைகளைப் படிப்பது அவ்வளவு பிரயோஜனகரமுள்ளதாய் ஆகமாட்டாது.

முதல் முதல் கதையைச் சுருக்கமாக விவரிக்கிறேன். தாரகாசுரனென்ற ராக்ஷதனுக்கு மூன்று குமாரர்களிருந்தார்கள். அவர்களின் பெயர்கள், தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி. இம்மூவர்களும் பிர்ம்மாவைக்குறித்துத் தவஞ்செய்யவே, பிர்மதேவர் திருப்தியடைந்தவராகி, எந்தவரம் வேண்டுமோ கேளுங்களென ஆக்ஞாபித்தார். அதற்கு அவர்கள் ஏகமொழியாக, எவராலாகட்டும், எப்பொழுதாகட்டும் மரணம் நேராமலிருக்கும்படி வரமளிக்க வேண்டுமென்று வேண்டினார்கள். அதற்கு பிர்ம்மா இணங்காமல், வேறுவரம் கோருங்களெனச் சொன்னார். அதற்குமேல் இம்மூன்று அசுரர்களும் கலந்து யோசித்துப் பின்வருமாறு பிரார்த்தித்தார்கள்:—நாங்கள் மூன்று புரங்களை நிர்மாணஞ்செய்துகொண்டு, தங்கள் தயவால் இஷ்டானுஸாரமாய் ஜகத் முழுமையும் சஞ்சரிக்கிறோம். இவ்விதம் ஆயிரவருஷகாலம் யதேச்சையாய் சஞ்சரித்து, முடிவில் நாங்கள் ஏகபாவத்தையடைவோம். ஒன்றுவோம். அப்பால் எந்த தேவதாசிரேஷ்டன் ஒரே ஒரு பாணத்தாலே எங்கள் முப்புரங்களையும் நாசஞ்செய்வானோ அவனால் அப்பொழுதுதான் எங்களுக்கு மிருத்யு உண்டாகும்படி எங்களுக்கு வரத்தை தயவுசெய்யவேண்டுமென அவர்கள் கோரினார்கள். பிர்ம்மாவும் அப்படியே ஆகட்டுமென வரமளித்தார்.

அவ்வரத்தையடைந்து மிகவும் ஸந்துஷ்டர்களாகி, அசுரசிற்பியான மயனைப் பிரார்த்தித்து மிகவும் அழகாயுள்ள புரங்கள் மூன்றையும் நிர்மித்துக்கொண்டார்கள். ஒன்று தங்கத்தால் நிர்மாண

* தெலுங்கு திவ்யஞானதீபிகையிலிருந்து பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.



மானது, ஸ்வர்க்கலோகத்தில் உள்ளது. இரண்டாவது வெள்ளியாலானது அந்தரிக்ஷத்திலும், மூன்றாவது இரும்பாலானது பூலோகத்திலும் இருந்தன. மேலும், தாரகாக்ஷன் புத்திரன் ஹரியென்பவனும் தீவிர தவஞ்செய்யவே, திருப்தியடைந்த பிர்மதேவர் பிரஸன்னரானவுடன் மற்றொருவரம் வேண்டினான்:—

ஆயுதங்களால் காயங்களையடைந்து இறந்தவர்களை, ஒரு கிணற்றில் போட்டால், அக்கிணற்றின் ஜலத்தின் சக்தியால் அவர்கள் முன்னிருந்ததுபோல் பலமுள்ளவர்களாய் ஆகக்கூடிய ஒரு கிணற்றை தயவுசெய்யுங்களெனப் பிரார்த்தித்தான். பிர்ம்மா அவ்வரத்தை யளித்தார். அவ்வரத்தையடைந்து அவனது புரத்தில் "அமிர்தசஞ்சீவினி" என்னுமொரு கிணற்றை நிர்மித்தான். இதன் மஹிமையால், இறந்தவர்கள் ஜீவிப்பதாலும், காயங்களை அடைந்தவர்கள் பூரணதிட சரீரமுள்ளவர்களாய் ஆவதாலும், முப்புரங்களில் அசுரர்கள் மரணமற்றவர்களாகி மூவுலகங்களுக்கும் பீடைசெய்துகொண்டிருந்தார்கள். அதன்பேரில் தேவதைகள், ரிஷிகள் முதலாயுள்ள எல்லோரும் பிர்மாவினிடம் சென்று பின்வருமாறு முறையிட்டுக்கொண்டார்கள்:—"இந்த துஷ்டர்களுக்குத் தாங்களளித்த வரங்களால் கெர்வமுடையவர்களாகி ஸகல லோகங்களுக்கும் பீடையை உண்டாக்குகிறார்கள். அவர்கள் உபத்திரவங்களினின்று எங்களைத் தப்பித்துக்கொள்ளும் வழியைக்காட்டுங்கள்." அதற்கு பிர்ம்மா இவ்விதம் சொன்னார்:—"அவர்கள் நியமானுசாரமாய்த் தபஸைச்செய்ய அவர்களுக்கு வரங்கள், அதாவது அவர்களின் அபீஷ்டங்கள், சித்திக்காமல்போகாது. இவையெல்லாம் பிரகிருதிதர்மங்கள். நியமானுசாரமாய்த் தவஞ்செய்யின், அதன் பலன் அவர்களுக்குத் தப்பாமல் உண்டாகும். ஆனாலும், எனக்கு ஸர்வபூதங்களும் ஒன்றே. எவர்கள் அதர்மத்தில் வர்த்திப்பார்களோ அவர்கள் தப்பாமல் நிக்கிரஹஞ் செய்யப்படவேண்டியவர்களே. இதில் சந்தேகமில்லை. ஆனால் இம்முப்புரங்களையும் ஒரேபாணத்தால் நாசஞ்செய்யவேண்டும். வேறுமார்க்கமில்லை. அவ்விதம் செய்தல் சங்கரனுக்குத் தவிர இதரர்களுக்கு ஸாத்தியமன்று. ஆகையால் நாமெல்லோரும் சங்கரனிடஞ்சென்று பிரார்த்திப்போம்". பிர்ம்மதேவர் இவ்விதம் சொல்லவே தேவர்கள் எல்லோரும் பிர்ம்மதேவரோடு ஸ்ரீ சங்கரரிடம் சென்று தங்கள் துரவஸ்தைகளைத் தெரிவித்தார்கள். அதன்பேரில் ஸ்ரீசங்கரர் "எனது தேஜோ

பலன்களில் பாதிபாகத்தை உங்களுக்களிக்கிறேன். அதைப்பெற்று நீங்கள் சத்துருக்களை நாசஞ்செய்யுங்கள்" என வாக்களித்தார். அதற்கு தேவதைகள், அவருடைய பாதிதேஜஸை யேற்றுத்தாங்குவதற்கு தங்களுக்கு சக்திபோதாதென்றும், தேவதைகள் எல்லோரும் தங்கள் சக்தியை அவரோடு சேர்த்துவிடுகிறதாகவும் அதனுடன் அவரே சத்துருக்களை ஸம்ஹாரஞ்செய்யவேண்டுமெனவும் வேண்டினார்கள். அதற்கு சங்கரர் தேவதைகளிடம், "நீங்களெல்லோரும் ஏகீபவித்து ரதத்தையும், குதிரைகளையும், தனுர்பாணங்களையும் ஸாரதியையும் சித்தப்படுத்துங்கள்; நான் இப்பொழுதே சத்துருஸம்ஹாரஞ்செய்கிறேன்". என வாக்களித்தார். அவ்விதமே தேவதைகளெல்லோரும் தங்கள் தங்கள் சக்திகளைச் சேர்த்து, ரதம் முதலியவற்றை சித்தப்படுத்தினார்கள். ஸ்ரீ சங்கரர் அந்த ரதத்தில் பிரவேசித்து, ஏகாக்கிரசித்தத்துடன் முப்புரங்களின் மீது திருஷ்டியைவைக்கவே, முப்புரங்களும் ஒன்றாயின. அப்பொழுது ஒரு பாணத்தைப் பிரயோகிக்கவே, முப்புரங்களும் நாசமாயின. அசுரர்கள் அத்துடன் பஸ்மமானார்கள்.

இது புராணக்கதை. அதின் கருத்தெதுவோ அதை விசாரிப்போம். முப்புரங்கள், பூலோக, புவர்லோக, ஸ்வர்க்கலோகங்களில் ஜீவனுக்குள்ள உபாதிகள், சரீரங்கள். இவையே தேஹாத்மா, இந்திரியாத்மா, சங்கற்பாத்மா என வழங்கப்படும் ஸ்தூல தேஹம், காமமயதேகம், மனோமய சரீரமாகும். இம்மூன்றும் சேர்ந்ததுதான் ஸாமான்ய மனிதன் "நான்" என எண்ணிக்கொண்டிருப்பான். இம்மூன்று தேகங்களோடு தாதாத்மியத்தையடைந்த ஜீவனே, வேறு வேறு பாவனைகளால் திரிபுராசுரன் எனப்படுவான். இந்த தேஹதாதாத்மியத்தை யடைந்துள்ள ஜீவன் எப்பொழுதும் ஸ்வலாபபுத்தியுடையவனாகி இதரானுடைய யோகக்ஷேமங்களை கிஞ்சிற்றேனும் கவனியாமல், இதரர்களுக்குப் பீடையைச்செய்துகொண்டிருப்பான். காமம் அவர்களது ஸ்வபாவம். காமம் ஒரு ரூபத்தில் கொல்லப்பட்டபொழுது அது மற்றொரு ரூபத்தில் மீளவும் ஜனித்துக்கொண்டிருக்கும். இதுவே மானிடசுபாவத்திலுள்ள அமிர்த ஸஞ்சீவினிக்கிணறு. இது ஹிரண்மயமான புரத்திலன்றோ நிர்மிக்கப்பட்டது. அதாவது, இது மனதை ஆசிரயித்திருக்கும். இப்புரங்கள் ஒவ்வொன்றாக நாசஞ்செய்யப்படும் பக்ஷத்தில் ஒரு ரூபம் மாறின் மற்றொரு ரூபமாக ஜனித்துக்



கொண்டேயிருக்கும். இம்மூன்று தேகங்களையும் ஏககாலத்தில், ஓரேபாணத்தாலே நசிக்கச்செய்யலாம். அதாவது தேஹேந்திரிய சங்கற்பாத்மாவின் ஜனிதமாயுள்ள அஹம்பாவம் ஒரே தடவையில் நசிக்கவேண்டும். அவ்விதம் நசிக்கச்செய்வதற்கு ஸாமான்யமாய் பிர்ம்மாதி தேவர்களால் முடியாது. ஈசுவரனே செய்யத்தகும்; அதாவது ஈசுவராம்சமான "பிரத்யகாத்மா" (Monad) வே ஜீவலோகத்தில் ஜீவனாகி, "மநஷ்ஷஷ்டானீந்திரியாணி" மனம் இந்திரியங்களின் துவாராவிகசித்து, நித்தியனான ஜீவாத்மாவினிடம் பிரதிஷ்டை அடைந்தவுடன் அந்தப் பிரத்யகாத்மாவின் ஜோதியாலேயே இந்த தேஹேந்திரிய சங்கற்பாத்மாக்களென்ற முப்புரங்களையும் ஒரே அடியால் நாசஞ்செய்ய ஸாத்தியமாகும். இந்திரியம் மனம் இவைகள் தேவதைகளின் சக்திகள். "தேவா:" எனின், வேதாந்தசாஸ்திரத்தில் இந்திரியங்கள்—மனம் உள்பட. இவ்வித தேவதைகளின் சக்திகளின் சேர்க்கையால் மாத்திரமே ஒழிய "ஜீவாத்மா" என்னும் ரதம் நிர்மாணமாகா. ஈசுவராம்சம் முதலில் மண் பாஷாணாதிகளிடத்தும், அப்பால் செடி விருக்ஷாதிகளிடத்தும், திரியக் ஜந்துக்களிடத்தும், வரிசையாய் விகசித்துக் காலக்கிரமத்தில் விக்ஞானமயகோசம் நிர்மாணமாகவே, மனிதத்வம் சித்திக்கும். விக்ஞானமய கோசாபிமானியே ஜீவனென்னப்படுவான். இதுவே ரதம். இந்த ரதத்தில் பிரத்யகாத்மாவின் ஜோதி பூரணமாய்ப் பிரகாசிக்க ஆரம்பிக்கவே, மனிதனுடைய நீசஸ்வபாவம், ஸ்வலாபபுத்தி, அஹங்காரம் முதலியவைகள் நசிக்கும். அப்பால் தேஹேந்திரியம் மனம் முதலியவைகள் நிர்மலமாகி, பகவத்சங்கற்பத்தை யொட்டி நடப்பவைகளாகி, பகவத்சங்கற்பத்தை உலகில் நிறைவேற்றுவதற்கு ஸாதனங்களாயுள்ள உபகரணங்களாகும்.

இவ்விதம் படிக்கும் நண்பர்காள்! முப்புரங்களும் திரிபுராசுரர்களும் நம்மிடமே இருக்கிறார்கள். அவர்களை ஸம்ஹாரஞ்செய்யக்கூடிய "பிரக்ஞானாம்சு" என்னும் பிரத்யகாத்மா நம்மிடமே இருக்கிறார். அந்த பிரத்யகாத்மா, ஜீவன் (விக்ஞானமயகோசாபிமானி) துவாராகவே ஒழிய, தேஹேந்திரிய ஸங்கற்பாத்மாக்களையும் கீழ்லோக தேஹங்கள் மூன்றையும் நாசஞ்செய்யமாட்டான். ஆகையால் ஸம்ஹாரம் செய்யத்தகுந்த சத்துருக்களை ஸம்ஹாரம் செய்யக்கூடிய சாதனசம்பத்தியான தேவதை

னவின் சக்தியும் ஸம்ஹாரகர்த்தாவான ப்ரத்யகாத்மாவும் நம்மிடமே உள. ஸாமான்யமாய் இப்பொழுது தேவதைகளின் சக்தி சத்துருக்களுக்கு சஹாயமாகி அவர்களை பலப்படுத்துகின்றது. அதாவது மனோசக்தியும் இந்திரிய விர்த்திகளும் பின்னபாவத்தையும், அஹங்காரமமகாரத்தையும் விருத்திசெய்துவருகின்றன. அந்த சக்தியைத்தடுத்துத் திருப்பி ப்ரத்யகாத்மாவின் ஸ்வாதீனஞ்செய்யவே, திரிபுரஸம்ஹாரமாகும். அதாவது மனம் இந்திரியங்கள், ஆத்மாவின் உபகரணங்களெனவும் ஜீவாத்மாவிற்கு வெளிப் பிரபஞ்சஞானத்தை உண்டாக்குவதற்கும், ஸ்வதர்மத்தையும், ஈசுவரசங்கற்பத்தையும் நிறைவேற்றுவதற்கும், நிர்ணயிக்கப்பட்ட ஸாதனங்களெனவும் அறிந்து, ஆத்மஸ்வாதீனமுள்ளவைகளாய் இருக்கும்படி அவைகளை நியமித்துக்கொள்ளின், அவையே ஆத்மவிகாஸ ஸாதனங்களாகும். இந்திரிய ஸம்பந்தங்களான விஷய இச்சைகள் தலையெடுக்கும்பொழுது, தக்ஷணமே அவ்விச்சைகளுக்குள்ளாகாமல், ஸமயாஸமய, தர்மாதர்ம விசாரணைசெய்து விவேகத்தோடு விஷயாதிகளிடத்து பிரவர்த்தித்து வரவே, இந்திரியங்கள் மனம், இவை ஆத்மவசமாகும். அப்பொழுது இந்திரியங்கள் ஜீவனை விபரீதவழிகளில் இழுத்து செல்லாமல் வசப்பட்டவையாகி உண்மையான கருவிகளேயாகும்.

படிப்பவர்கள் இந்த அர்த்தத்தைநன்றாய் மனனஞ்செய்து திரிபுரஸம்ஹாரஞ்செய்து அமிர்தத்வத்தை சாதிப்பார்களாக.

C. இராமய்யா.

---

## பஞ்சமஹாயக்ஞம்.

### பிர்ம்மயக்ஞம் அல்லது தெய்வயக்ஞம்.

61-ம் பக்கத் தொடர்ச்சி.

பிர்ம்மயக்ஞத்தை விதிவத்தாய் ஹோமாதிகளால் செய்வதுண்டு. இப்பொழுது அதை எவ்விதம் ஸாரத்தில் அனுஷ்டிப்பதென்பதைப்பார்ப்போம்.

நமக்குக்கிடைக்கும் ஸகலவஸ்துக்களும் தேவதைகளால்தான் கிடைக்கின்றனவென்பது எல்லோரும் அறிந்தவிஷயமே.



இதை உத்தேசித்தே பகவான் கீதையில் "நீங்கள் தேவதைகளுக்குக்கொடுக்கவேண்டியதை அளியுங்கள். அவர்கள் உங்களுக்கு வேண்டியவைகளை அளிப்பார்கள். பரஸ்பரம் அளித்துக்கொண்டு க்ஷேமமாயிருங்கள்'' என்று கூறினார். தேவதைகள் நமக்களிக்கும் வஸ்துக்களுக்குப் பிரதியளிக்காவிடினும் அவர்கள் அளிப்பதை நாம் ஸ்வீகரிக்கும்பொழுதெல்லாம் அவர்களையோ அல்லது அவர்கள் எவருடைய ஆக்ஞையின்படி தங்கள் வேலையைச்செய்துவருகிறார்களோ அப்படிப்பட்ட பகவானையாவது தியானித்து நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளலாம். உலகில் எல்லாவற்றிற்கும் பிராயச்சித்தமுண்டு. நன்றிசெலுத்தத் தவறுதலுக்குமாத்திரம் பிராயச்சித்தமில்லையென்றே ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இக்காரணம்பற்றியே நாம் உண்ணும்பொழுது கூட பிடிக்குப்பிடி கோவிந்தா-பிடிக்குப்பிடி நமசிவாய எனச்சொல்லும்படியாக இருக்கிறது. அவ்விதம் உண்போமாகின் உட்கொள்ளும் உணவு ஸாத்விகமாகி சரீரமும் அதற்குத்தக்கவாறு அமையும். அவ்விதமின்றி வம்புப்பேச்சு முதலியவைகள் பேசிக்கொண்டு உண்போமாகில், சரீரம் அதற்குத்தக்கவாறு ராஜஸமாகவோ தாமஸமாகவோ அமைந்து தீயவழிகளில் செல்லும். சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து இந்தயக்ஞத்தில் தேவதைகளின் அனுக்கிரஹத்தைப் பெறவேண்டியதே கருத்தாகும். காலத்திற்குத்தக்கவாறு நாம் எவ்விதம் பூர்வம் அனுஷ்டித்துவந்த தர்மகாரியங்களை மாற்றிச்செய்து வருகின்றோமோ அதுபோல் இக்காலத்தில் தேவதைகளின் ஆசிர்வாதத்தைப்பெற ஒரு வழியுண்டு. ஸ்மிருதிகளில் எந்தக்குடும்பத்தில் ஸ்திரீகள் கௌரவிக்கப்படவில்லையோ அக்குடும்பத்தை தேவர்கள் சபிக்கிறார்களென சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், ஸ்திரீகளின் நிலைமை மிகவும் பரிதபிக்கக்கூடிய விஷயமாயிருக்கிறது. அதைச்சொன்னாலோ மிகவும் விரியும். புருஷர்கள் அவர்களையும் ஒரு ஆன்மாவாக வெண்ணி அவர்களும் ஆன்மபரிபக்குவத்தைப் பெற்று முன்னேற்றத்தை அடையச்செய்து தங்களுக்குச் சமானமானவர்களாக்கி, இஹபரதர்மங்களை அனுஷ்டித்துவருதலே தேவர்களுடைய அனுக்கிரகத்தைப் பெற்றதாகும். அப்படிக்கில்லாவிடின் தேசமே கெட்டுப்போகும். குழந்தைகள் பால்யகாலங்களில் விசேஷமாய்த் தாய்மார்களுடைய பார்வையில் இருந்துவருகிறபடியால் அவ்வித தாய்மார்கள் யோக்யதைபற்று

வர்களாயிருந்தால் குழந்தைகளும் கெட்டுப்போய் அதன் துவாரா தேசமும் கெட்டுப்போகும் என்பதற்குச் சாக்ஷியமும் வேண்டுமோ? தேசமென்னும் மஹாரதம் ஸ்திரீ புமான்கள் இருவர்களால் ஒத்து இழுக்கப்படல்வேண்டும். கேவலம் புமான்களால் மாத்திரம் இழுக்கசாத்தியமன்று. மேலும் நாம் காமகதியையும் சிந்தித்துப்பார்ப்பது அவசியமாகும். ஜீவர்கள் எப்பொழுதும் ஆண் சரீரத்தையே தரிப்பதில்லை. மாறி மாறி ஆண் சரீரத்தையும் பெண் சரீரத்தையும் தரிப்பதுண்டு. ஆகையால் இந்த ஜன்மத்தில் ஒருவன் ஒரு பெண் சரீரத்தைத்தரித்த ஜீவனுடைய விகாசத்திற்கு இடையூறுசெய்யும் விஷயத்தில், அதன்பலனாக அவன் மறு ஜன்மத்தில் பெண்சரீரத்தைப்பெற்று வேறொரு ஆண் சரீரத்தைப் பெற்றவனால் விகாசத்திற்கு பங்கம் ஏற்படுமெனச் சொல்லவும் வேண்டுமோ? இனி அடுத்த யக்ஞத்தைப்பற்றி விசாரிப்போம்.

## பிதுர்யக்ஞம்.

பிதுருக்களுக்கு தர்ப்பணம் முதலியவைகளால் திருப்தி செய்து அவர்களுடைய அனுக்கிரஹத்தைப் பெறுதலுண்டு. இங்கு அதை எவ்விதம் ஸாரத்தில் அடைவதென்பதைப் பார்ப்போம். குலம் ஸத்புத்திரர்களாலும் புத்திரிகளாலும் விளங்கவேண்டுமென்பது பிதுர் தேவர்களுடைய நோக்கமாக இருக்கின்றது. அவ்விதம் குலம் விளங்காவிடின் பிதுர் தேவதைகள் சபிக்கிறார்களென்பது நிச்சயமே. நாம் என்ன திலதர்ப்பணாதிகள் செய்யினும் பிரயோஜனப்படாது. தினம் ஒரு ஆவர்த்தி பூஜாகாலத்தில் அல்லது சௌகரியமான நேரத்தில் தங்களுடைய பிதுருக்கள் லோகாந்தரத்தில் கஷ்டப்படாமல் உத்தமலோகத்தை யடையவேண்டுமென்று பக்தி சிரத்தையோடு இஷ்டதேவதையைச் சரிவர தியானிக்கின் அது அவர்களுக்கு விசேஷ நன்மையை அளிக்கும். இதற்கு எவ்வித செலவுமில்லை. மனதைச் செலவழிக்கின்போதும். இதற்குக்கூட பஞ்சம்நேரும்படி செய்யப்படாது. இனி குலம் நன்றாக விளங்கும்படிசெய்து பிதுர்தேவதைகளின் அனுக்கிரஹத்தை அடையும் வழியைப்பார்ப்போம்.

எவர்கள் உண்மையான சாஸ்திர விதியைவிட்டு விலகி, காமத்தால் சாஸ்திரவிதியை அனுஷ்டிப்பதாகப் பிதற்றிக்கொண்டு



அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் சித்தியையும் அடைவதில்லை; சுகப்படுவதுமில்லை; பரகதியையும் அடைவதில்லை என்று பகவத் கீதையில் கூறப்பட்டிருக்கிறது. உண்மையில் ஆப்தவாக்கியங்களை உள்ளவாறு அனுஷ்டித்தால் கெட்ட பலன்கள் உண்டாகுமா? உண்டாகவேமாட்டாது. நல்லபலன்களே உண்டாகும். எப்பொழுது கெட்ட பலன்கள் நேரிடுகிறதோ அது சாஸ்திர விதியை ஒத்ததல்லவென்று ஊகிக்கவேண்டாமா? காமத்தால் சாஸ்திராதிகளைத்தப்பாக அர்த்தஞ்செய்து விபரீத சம்பவங்களுக்கும் அதர்மங்களுக்கும் இடம் கொடுத்துவிடுகிறார்கள். நமது இந்திய தேசத்தையோ புண்ணிய பூமியென்று சொல்லுகிறோம். ஆப்தவாக்கியங்களை அனுஷ்டிப்பதாகவும் எண்ணம். அப்படியிருக்கின் ஆயுர்பாவம் 100-வருஷமாக இருந்தது சராசரி 23½ ஆகக் குறைவானேன்? சென்னை இராஜதானியில் மாத்திரம் ஸர்கார் ஜன சங்கை கணக்குப்பிரகாரம், 1 ஆண்டு நிறையாத பெண் குழந்தைகளில் 31-ம், 5 வயதுக்குள்பட்டவர்களில் 642-ம், 5 க்குமேல் 10 வயதுக்குள்பட்டவர்களில் 4072-ம், 10 க்குமேல் 15 வயதுக்குள்பட்டவர்களில் 18323-ம், ஆக 23.068 விதவைகள் இருப்பானேன்?

இந்தியாவாகிய புண்ணிய பூமியில் ஒரு நிமிஷத்துக்கு 15 குழந்தைகள் விகிதம் வருடம் ஒன்றுக்கு 77,76000 (எழுபத்தியேழுலக்ஷத்தி எழுபத்தாறாயிரம்) குழந்தைகள் மடிவானேன்? இதுதானா குலம் விளங்கும்மார்க்கம்? பிதுர்தேவதைகள் திருப்தி அடையக்கூடியது இவ்வகைப் பலன்களில்தானே? அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! நிற்க, எல்லோரும் ஆசிரமதர்மம் கெட்டுப்போச்சுதென்று குதித்துக் குதித்துப் பேசுகிறார்கள்; அது வாஸ்தவமே. ஆனால் கெடாதிருக்கும்வழியை அவர்கள் அனுசரிக்கவில்லை. அனுசரிப்பவர்கள் மிகவும் அரிது. உலகில் இப்பொழுது ஓங்கிவரும் அதர்மங்களுக்கெல்லாம் முக்கியகாரணம் ஆசிரமதர்மத்தை அனுஷ்டியாத குற்றமேயொழிய வேறில்லையென்று மும்முறை அழுத்தமாய்ச் சொல்லத்தகும்.

ஆசிரமமாவன:—பிர்ம்மசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம். இவைகளில் சிரசாயுள்ளது பிர்ம்மசரியம். இந்த ஆசிரமப்பழக்கத்தில், வேண்டிய எல்லா ஸத்குணங்களும்,

யோக்யதைகளும் ஏற்பட்டுவிடுகின்றன. அவைகள் ஏற்பட்டுவிடின் "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிப்படி பூரண ஆயுள்பரியந்தம் தொடர்ந்திருந்து ஏனைய ஆசிரம தர்மங்களும் ஒழுங்காய் நடைபெறவழியுண்டு. அது ஒழிந்தகுற்றம்தான் எல்லா தருமங்களும் கட்டுக்கெட்டுத்தடுமாறி அதர்மங்களில் மூழ்கி உலகம் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. முற்காலங்களிலே குருகுலவாசத்தில் பிரம்மசாரி ஆசிரமம் ஒழுங்காய் அனுஷ்டிக்கப்பெற்றுவந்தது. அதனால் ஏனைய ஆசிரமங்கள் சரிவர அனுஷ்டிக்கப்பட்டு எல்லாம் சுகமாயிருந்தன. அப்பால் காமத்தை அனுசரித்து நடக்க ஆரம்பிக்கவே, எல்லாம் பட்டுநூல் தலைப்புக்கெட்டதுபோல், விகாரமாய் மாறிவிட்டன. விபரீதங்களும் கஷ்டங்களும் ஏற்பட்டுவிட்டன. பிரம்மசாரி விரதத்தை அனுஷ்டியாததோஷத்தால் பலவித அன்னபானாதிகள், சங்கங்கள் முதலியவற்றால் பாலர்களுக்கும் பாலிகைகளுக்கும் இந்திரியங்களில் கொதிப்புண்டாகி அகாலசேஷ்டைகள் ஏற்பட்டுவிட்டன. பாலிகைகளும் 11–12 இந்த வயதுகளில் வியாதியின் காரணத்தால் ருதுவாகி விடுகிறார்கள். 15–16 வயதுகளில் ஆவதே சரியான ருதுவாகும். அக்காலம் அங்கமெல்லாம் பூர்த்தியடைந்திருக்கும். பள்ளிக்கூடங்களில் படிக்கும்பொழுதே 15–16 வயது பையனுக்கும் 11–12 வயது இளம் பெண்ணுக்கும் சாந்தி கல்யாணமும் ஆகிவிடுகின்றது. ஆனாலென்ன? அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லையாவென்று சிலர் வினவலாம். குழந்தை பிறப்பது சரியே. ஆனால் பாட்டியார்வாக்கு சரிவரப்பலிக்கின்றது. பாட்டியார் தன்கண் மறையுமுன் அவ்வித பேரன் பேத்திகளுக்கு ஒரு கடுகு அளவு அல்லது ஒரு நாக்கு பூச்சியளவு ஒரு குழந்தை பிறந்து பார்த்துவிட்டுப்போனால் தன் மனதிற்குத்திருப்தியாயிருக்குமென்று ஆசைப்படுகிறாள். அதோடு நிற்பதில்லை. கண்டகண்ட கோவில்களுக்கெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டும் காணாதகோவில்களுக்கு வேண்டுதலையும் செய்கிறார்கள். குழந்தை பாட்டியார் வாக்குப்படியே பிறக்கிறது. இவ்வித குழந்தைகள் நிமிழத்திற்கு பதினைந்து மாண்டுபோவது ஆச்சரியமில்லையே. மேலும் பையன்களின் படிப்பின்கதி என்ன ஆகுமென்பதை நீங்களே யோசித்துக்கொள்ளவேண்டும். 30 வயதுக்குள் பேரன் பேத்தி எடுத்துவிடுகிறார்கள். 30 வயதில் இறந்தும் விடுகிறார்கள். அவர்களைப்பற்றி விசேஷமாய் துக்கிப்பாருமில்லை. ஏதோ பேரன்



பேத்தியைப்பெற்று விட்டான், போகட்டும் என்று பூர்வம் 70,80 வயதானவர்களுக்கு சமாதானம் செய்துகொண்டதுபோல், மனச்சமாதானப்படுத்திக்கொண்டு விடுகிறார்கள்.

அவர்களுக்கு திடமான சிசு உண்டாவதில்லை. இவ்வித சிசுக்கள் ஜனிக்க இடம் கொடுக்கின் தேசம் எவ்விதம் முன்னேற்றத்திற்குவரும்? இதைத்தான் சுருதியில் "பலவீனமுள்ளவனால் இகத்திற்கும் பிரயோஜனமில்லை; பரத்திற்கும் பிரயோஜனமில்லை" யென்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகள் கூட, தேகபலத்தைப் பெற்றுத்தான் பின்னர் கீதை முதலிய ஆப்த வாக்கியங்களைப் படித்தல் வேண்டுமெனச் சொல்லுகிறார். அது மிகவும் உண்மையே. தேகபலமில்லாவிடின் ஆப்த வாக்கியங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியாது.

ஆகையால் முற்காலத்தைப்போல் இக்காலத்தில் குருகுலவாசம் செய்து பிரம்மசாரிவிரதத்தை அனுஷ்டிக்கக்கூடிய சௌகரியங்கள் இல்லாவிடினும் இக்காலத்தின் ஸ்திதிகளுக்குத் தக்கவாறு யோசிக்கக்கூடிய பெரியோர்கள் அந்த விரதத்தை அனுஷ்டிக்க வழி வாய்க்கால்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மனமிருக்கின் அனுஷ்டிக்கலாம். அதில் முக்கியமானது சாரணர் இயக்கம் (Scout Movement). இது ஏகதேசம் பிரம்மசாரி ஆசிரமத்தை ஒட்டியது. இக்காலத்திய படிப்போ எல்லா கோசங்களையும் பக்குவமடையச் செய்வதில்லை. இதற்கும் பெரியோர்கள் வழி ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஸகல கோசங்களையும் பக்குவப்படுத்தாத படிப்பு படிப்பன்று. மனமிருக்கின் பக்குவப்படுத்திக்கொள்ளலாம். இப்பொழுது வயதானவர்கள் சரிவர தர்மங்களை அனுஷ்டிக்க முடியாததற்குக் காரணம் அவர்கள் பால்யத்தில் பிரம்மசாரி விரதத்தை சரிவர அனுஷ்டியாத குற்றமே ஒழிய வேறில்லை. "தான் கெட்டதுமன்றி சந்திரபுஷ்கரணியையும் கெடுத்தான்" என்ற பழமொழிக்கு ஒப்பாகாமல் நாம் கெட்டதோடே நிற்கட்டும். நமது இளம் சந்ததியார்களான பாலர்கள் பாலிகைகள் இவர்களின் பிரம்மசாரி தருமத்திற்குப் பங்கம் வராமல் பாதுகாத்து, அவர்களாவது க்ஷேமத்தை யடையும்படி செய்யின் அதுவே பேருதவியாகும். பிதுர்தேவதைகளும் திருப்தி அடைந்து ஆசீர்வதிப்பார்கள். நமக்கோ காலம் நெருங்கிவிட்டது.

இனி தேசம் அவர்களைப் பொறுத்து முன்னேற்றத்தையடையவேண்டியிருப்பதால் அவர்களுடைய பிரம்மசாரி விருதத்திற்கு எவ்வித பங்கமும் வராதிருக்கப் பார்ப்போமாக.

மேலும் ஸ்ரீ ஜகத்குரு வரும் இத்தருணத்தில் அநேகமாயிரம் உத்தமமான ஜீவர்கள் ஜனிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் ஆழ்ந்து விசாரிப்பவர்களுக்கு இதன் உண்மை விளங்கும். அவ்வித ஜீவன்கள் துராசாரமுடைய இடங்களில் ஜனிக்கமாட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு இடம்கொடுக்கவும் நமது கீழ்சந்ததிகளின் பிரம்மசாரி விருதத்தைக் காப்பாற்ற நாம் முயற்சிப்பதும் முக்கிய கடமையாகும். இதுவே உண்மையான பிதுர்யக்ஞம். பிதுர்தேவதைகளின் ஆசீர்வாதத்தோடு பரமனுடைய அனுக்கிரஹமும் உண்டாகும். இவ்விஷயம் பரம முக்கியமானதாகத் தோன்றினபடியால் கொஞ்சம் விரித்து எழுதும்படி நேர்ந்ததற்கு படிப்பவர்கள் மன்னிப்பார்களாக. இனி அதிதி யக்ஞத்தைப்பற்றி விசாரிப்போம்.

## அதிதி யக்ஞம்.

அதிதியெனில் மனிதன். அதிதிக்கும் நமக்கும் ஒரு சம்பந்தமிருக்கின்றதென்பதை தினந்தோறும் ஞாபகப்படுத்தவேண்டியே, முக்கியமாய் நமது ஹிந்து மதத்தில் கிரஹஸ்தன் பசியால் வருந்திவரும் அதிதியை ஈசுவரஸ்வரூபமாகப்பாவித்து முதலில் அவனது பசியையாற்றிப் பின்னர்தான் புசிக்க வேண்டுமென்றேற்பட்டது. வைஷ்ணவசம்பிரதாயத்தில் "மாலமுது செய்யாதுவந்தவெல்லாம்" அதாவது பகவான் அமிசைசெய்யாததைப் புசிக்கப்படாதென்று உண்டு. அதன் உட்கருத்தைவாங்காத சிலர் கதவை உள்ளே தாளிட்டுக்கொண்டு பூசைப்பெட்டியிலுள்ள சிலையை எடுத்துவைத்து அதற்கு புசிக்கும் அன்னபானாதிகளை நிவேதனம்செய்துவிட்டுத் தாங்களே வயிறு புடைக்கத்தின்று விடுவார்கள். அச்சிலை கொஞ்சம் ஸ்வீகரிக்கக்கூடுமேயாமாகில் அதற்குக் காட்டாமலே விழுங்கிவிடுவார்கள். இச்சமயம் பகவான் அதிதி ஸ்வரூபமாய் வெளியில் பசியால் வருந்தி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார். பேசும் பகவானுக்கோ ஒன்றுமில்லை. இன்னும் சிலர் அதிதி பூசை செய்துவருவதாக நடித்து அகாலத்தில் கதவைத்திறந்து வெளியே



வந்துபார்த்து மும்முறை கூப்பிட்டு எவருமில்லாமையால் பின்னர் தாங்கள்போய் புசித்தலுமுண்டு. காலத்தில் கதவைச்சாத்தாமலிருந்தாலன்றோ வந்த அதிதி அங்கு தங்கியிருப்பார். ஆகையால் தான் அவர் காலத்தில் பசிக்கு அன்னம் எங்குகிடைக்குமோ, அங்கு சென்றுவிடுகிறார். இவ்விதம் நடிப்பது பிறரை ஏமாற்றியதாகமாட்டாது. தன்னையே ஏமாற்றிக்கொண்டதாகுமேயொழிய வேறில்லை. சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து பசியால்வருந்தும் ஒரு அதிதிக்கு அன்னமிட்டுப் பசியைமாத்திரம் ஆற்றி அனுப்புகிறதென்றல்ல. அதானது நமது ஞாபகத்திற்கு ஒரு அறி குறியாக இருந்தாலும் கூட இதராளுக்கு வஸ்திரம், வீடு, பிணி, வித்தை ஆன்மவித்தை முதலிய இவைகளில் எவ்விதகஷ்டங்களிருக்கினும் அவைகளை நிவர்த்திப்பதுவே உண்மையான அதிதியக்ஞமாகும். இதுவே பகவத்கைங்கரியமுமாகும். இனி கடைசியாயுள்ள பூதயக்ஞத்தை விசாரிப்போம்.

## பூத யக்ஞம்.

பூதவர்க்கத்தில் மிருகாதி முதலியவைகள் அடங்கும். மிருகவர்க்கத்திற்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தை காட்டவேண்டியே நமது ஹிந்து மதத்தில் கிரஹஸ்தன் முன்னர் காக்கைக்கு பலிபோட்டுவிட்டுப் பின்னர் தான் புசிக்கும் சம்பிரதாயமுண்டு. மேற்கண்ட பலிமாத்திரம் போட்டுவிட்டுப்பின்னர் கிரஹஸ்தர்கள் கொஞ்சம் கூட யோசிக்காமல் பக்ஷிகள் மிருகங்கள் முதலியவைகளுக்கு எவ்வளவோ உபத்திரவங்கள் செய்துவருகிறார்கள். அது சரியன்று. சில மிருகங்கள் நம்முடைய சௌகரியங்களுக்கு வேண்டியிருக்கின்றன. அவ்வித மிருக ஜீவர்கள் நம்மைவந்தடைய நேரிடும்பொழுது அவைகளின் மிருகத்தன்மையைக் குறைத்து அவைகள் முன்னேற்றத்தை அடையும்படி நாம் செய்யாவிடில் அவ்வித கர்மத்திற்கு நாம் பாத்தியப்படவேண்டியவர்கள் என்பதையும் மனதில்வைக்கவேண்டும். எவ்விதத்திலும் ஜீவஹிம்ஸை கூடாது. ஜீவகாருண்யமே உண்மையான பூதயக்ஞம். அதுவே மனிதனை பரகதிக்குக் கொண்டுபோகக்கூடியது. கொஞ்சம் உணர்வு விகாசப்பட்டிருந்தால் விருக்ஷவர்க்கம் முதலியவைகளிடத்தும் நாம் ஒழுங்கான முறைமையில் நடந்துகொள்ள வேண்டியவர்களாவோம். தத்துவத்தையறியாத

வர்களுக்கு இது வியப்பாகத்தோன்றும். விசாரித்துப்பார்க்கின் வியப்பேயன்று. நமது பூர்வீகர்களான மஹரிஷி முதலியவர்கள் பல் விளக்குவதற்குக் குச்சி ஒடித்தால் அதற்குண்டான மந்திரத்தைச்சொல்லிப் பின்னர் குச்சி ஒடித்துப் பல்துலக்கவேண்டுமென்றும், ஔஷதங்களுக்கு மூலிகைகள்வேண்டுமாயின் அந்தந்த மூலிகைகளுக்காக ஏற்பட்ட குறிப்பானவேளையில் மூலிகையின் சாபத்தை மந்திரத்தால் நிவர்த்திசெய்து ஸ்வீகரிக்கவேண்டுமென்றும் தெளிவாய் எழுதிவைத்திருக்கிறார்கள். அதன்படி நடந்தவர்களுக்கு எவ்வளவோ நன்மைநேர்ந்தது. தத்துவங்களை மறந்து இஷ்டப்படி அவைகளை ஸ்வீகரித்து உபயோகித்துவருவதால் அவைகள் நமக்கு சரியானபயனை அளிப்பதில்லை. விருக்ஷவர்க்கங்களை கவனித்துவரும் தேவதைகளுக்கு வனதேவதைகளெனப் பெயர். அவர்கள் கடவுளுடைய மனதை நன்கறிந்து அவைகளை மிகவும் அழகாய் சிரமப்பட்டு நிர்மாணஞ்செய்துவருகிறார்கள். காசாம்பூவை யெடுத்துக்கொள்வோம். அதனுடைய வர்ணத்தைப்போல் நாம் ஸ்தூலலோகத்தில் வர்ணம் தீட்டமுடியுமா? முடியவேமாட்டாது. அவ்விதம் அந்த தேவதைகள் அருமையாய்ச் செய்துவரும் வேலையை நாம் கொஞ்சமேனும் லக்ஷியம் செய்யாமலும் கடவுளுடைய அழகைப்பற்றிவியக்காமலும் நாம் அந்த விருக்ஷாதிகளை கண்டபடி ஸ்வீகரிக்கின் அந்த தேவதைகள் நம்மைத் தாங்கள் செய்துவரும் வேலைக்குப் பரம விரோதிகளாகப்பாவித்து நமக்குச் சாபமிடுகிறார்கள். ஆனதுபற்றியே அவ்வித விருக்ஷாதிகளை அத்தேவதைகளைப் பிரார்த்தித்து ஸ்வீகரிக்காத குற்றத்தால் நமக்கு அவர்கள் க்ஷேமத்தையளிப்பதில்லை. கேவலம் ஒரு குழந்தை மணலில் விளையாட்டிற்காக ஒரு வீடு சிரமப்பட்டுக் கட்டிக்கொண்டிருக்கும்பொழுது அதன் அருமையை யறியாமல் நாம் காலால் தட்டிவிட்டுச் செல்வோமாயின் அக்குழந்தைக்கு நம்மிடம் எவ்வளவு ஆத்திரம் ஜனிக்குமென்பதை நாமே யோசித்துக்கொள்ளலாம். அவ்விதமே வனதேவதைகளுக்கும் ஆத்திரமுண்டாகும். கரிசலாங்கண்ணி யென்ற கையாந்தரை மூலிகையில் எவ்வளவோ ரகசியம் இருக்கின்றதென்றும் பெரியோர்களிடம் எவ்வளவு காலம் தொண்டுபுரியினும் அதன் மர்மத்தை வெளியிட மாட்டார்களென்றும் வடலூர் ஸ்ரீ இராமலிங்க ஸ்வாமிகள் கூறியிருக்கிறார். உணர்ச்சியில்லாத தோஷத்தால் நமக்கு இத்யாதி



விஷயங்கள் விஷயமாகத் தோன்றவில்லை. இதைத்தான் திருமங்கையாழ்வார் "உணர்வெனும் பெரும்பதம் நான் கண்டுகொண்டேன்" என்று பாடியிருக்கின்றார்.

இனி உணர்வு இருக்கும் விஷயத்தில் கல்வர்க்கத்தினிடமும் நாம் கிரமப்படி ஒழுகவேண்டியதும் அவசியமாகும். இது சுகாதாரத்தை ஒட்டியதாகும். இதை உத்தேசித்தே பூர்வீகர்கள் மலை, மாடுகள் மேயும் ஸ்தலம் முதலிய இடங்களில் ஆபாசம் செய்யப்படாதென நியமித்திருக்கிறார்கள். அதன்படி ஒழுகினால் எவ்வளவோ சுகமுண்டு.

ஆகையால் மேற்கண்டபடி ஸாராம்சத்தில் தினந்தோறும் யார்தான் பஞ்சமஹாயக்ஞத்தை அனுஷ்டிக்கப்படாது? மானிடராய்ப்பிறந்த எல்லோரும் நிராக்ஷேபமாய் அனுஷ்டிக்கலாம். எல்லோரும் க்ஷேமப்படலாம்.

அதற்குவேண்டிய பக்தி, சிரத்தை, பூததயை உத்ஸாஹம் முதலியவைகளை ஜகதீசுவரன் நமக்குக்கொடுத்தருள் புரிவாராக.

(இன்னும் வரும்.)

V. இராமச்சந்திர நாயுடு.

---

# கிரணப்பான்மைகளில் தீக்ஷாக்கிரமம்,

## பிரமஞான மாணவர்களுக்காகத் தமிழில் செய்யுளாயமைத்து அர்ப்பிக்கப்பட்டது.

:(o):

தீக்ஷாக்கிரமத்தைத் தெரிக்குங்காலைத்
தேர்வைபத்தாம் கிரணமும் ஏழாம்—அவற்றுள்
முதல்நான்கெல்லாக் கிரணத்தும்மே
மொய்ம்புடனுழைக்கும் முனிவரசீடன்
ஐந்திலனைத்தும் ஜீவன்முக்தன்
ஆறிலங்ஙனமே சோகனாவர்
ஏழாவதினுறு முதலில் மனுவும்
இரண்டாங்கிரணம் போதிசத்துவரும்
மற்றைய ஐந்தில் மகாசோகனரும்

எட்டிலுள்ள இருகிரணங்களில்
பிரத்யேகபுத்தரும் புத்தருமவர்
ஒன்பதில் இறைவன் ஒன்றேயாகும்
பத்தில் மௌன சாக்ஷியதாமென
வெள்ளியம்பலாமே விரிக்கின்றதுவே.

---

## SEVEN RAYS.

1st Ray - Divine — Sphere
2nd Ray - Monodic — Icosohedron - (16 sided)
3rd Ray - Spiritual—Dodecohedron (12 Sided)
4th Ray - Intutional—Octohedron (8 sided)
5th Ray - Mental——Cube (6 sided)
6th Ray - Astral-Tetrahedron (4 sided.)
7th Ray - Physical Point.

## ஸப்த கிரணங்கள்.

இதை பிரமஞான மாணவர்க்காக தமிழில் செய்யுளாக அடியில் கண்டபடி செய்து அர்ப்பிக்கிறேன்

கிரணம் முதலே தெய்வீகம் கேளது வட்டவடிவினதாம்
கிரணம் இரண்டு ஏகத்வம் கிளருருவும் பதினறுகோணம்
கிரணம் மூன்று ஆத்மத்வம் கேட்கில் பன்னிருகோணமது
கிரணம் நான்கு தற்போதம் கேளெண் கோணம்மதுவாமே
கிரணம் ஐந்தே மானசிகம் கேட்டாலதுதானறு கோணம்
கிரணம் ஆறே ஆசையதாம் கிட்டுநாற் கோணம் மதுவே
கிரணம் ஏழே தூலமதாம் கேவலம் புள்ளிய தென்றேரே

K. S. இராமஸ்வாமி அய்யர்.